# டிசம்பர் – 11 – செவ்வாய்

புனித தமாகஸ்

**ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள் அவர் பெயரை வாழ்த்துங்கள்- திபா 96 : 2**

---

## முதல் வாசகம் : ஏசாயா 40 : 1 – 11

"ஆறுதல் கூறுங்கள் என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள்" என்கிறார் உங்கள் கடவுள். எருசலேமிடம் இனிமையாய்ப் பேசி, உரத்த குரலில் அவளுக்குச் சொல்லுங்கள் அவள் போராட்டம் நின்றுவிட்டது. அவள் குற்றம் மன்னிக்கப்பட்டது. அவள் தன் பாவங்கள் அனைத்திற்காகவும் ஆண்டவர் கையில் இருமடங்கு தண்டனை பெற்றுவிட்டாள். குரலொளி ஒன்று முழங்குகின்றது. பாலைநிலத்தில் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் பாழ்நிலத்தில் நம் கடவுளுக்காக நெடுஞ்சாலை ஒன்றைச் சீராக்குங்கள். பள்ளத்தாக்கு எல்லாம் நிரப்பப்படும் மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும் கோணலானது நேராக்கப்படும் கரடு முரடானவை சமதளமாக்கப்படும். ஆண்டவரின் மாட்சி வெளிப் படுத்தப்படும் மானிடர் அனைவரும் ஒருங்கே இதைக் காண்பர் ஆண்டவர்தாமே இதை மொழிந்தார். "உரக்கக் கூறு" என்றது ஒரு குரல் "எதை நான் உரக்கக் கூற வேண்டும்?" என்றேன். "மானிடர் அனைவரும் புல்லே ஆவர் அவர்களின் மேன்மை வயல்வெளிப் பூவே! ஆண்டவரின் ஆவி இறங்கி வரவே, புல் உலர்ந்துபோம் பூ வதங்கிவிழும் உண்மையில் மானிடர் புல்லே ஆவர்! புல் உலர்ந்துபோம் பூ வதங்கி விழும் நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும். சீயோனே! நற்செய்தி தருபவளே, உயர்மலைமேல் நின்றுகொள்! எருசலேமே! நற்செய்தி உரைப்பவரே! உன் குரலை எழுப்பு, அஞ்சாதே! "இதோ உன் கடவுள்" என்று யூதா நகர்களிடம் முழங்கு! இதோ என் தலைவராகிய ஆண்டவர் ஆற்றலுடன் வருகின்றார் அவர் ஆற்றலோடு ஆட்சி புரிய இருக்கிறார். அவர்தம் வெற்றிப் பரிசைத் தம்முடன் எடுத்து வருகின்றார் அவர் வென்றவை அவர்முன் செல்கின்றன. ஆயனைப்போல் தம்மந்தையை அவர் மேய்ப்பார் ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார் அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார் சினையாடுகளைக் கவனத்துடன் நடத்திச் செல்வார்."

**பதில்பாடல் :** இதோ நம் கடவுள் ஆற்றலுடன் வருகிறார்.

## நற்செய்தி : மத்தேயு 18 : 12 - 14

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : "இந்த நிகழ்ச்சியைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று வழிதவறி அலைந்தால், அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைப்பகுதியில் விட்டுவிட்டு வழிதவறி அலையும் ஆட்டைத் தேடிச்செல்வார் அல்லவா? அவர் அதைக் கண்டுபிடித்தால் வழிதவறி அலையாத தொண்ணூற றொன்பது ஆடுகளையும் பற்றி மகிழ்ச்சியடைவதைவிட வழி தவறிய அந்த ஓர் ஆட்டைப்பற்றியே மிகவும் மகிழ்ச்சியடைவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்வாறே இச்சிறியோருள் ஒருவர்கூட நெறிதவறிப் போகக்கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம்" என்றார்.

**தியானம்:** எந்த மனிதனும் தனது மீட்பை இழந்து விடக்கூடாது என்பதே இறைவனின் விருப்பம் ஒருவரையும் சிறியவராய் எண்ணக்கூடாது, இறைவனின் பார்வையில் எல்லோரும் மதிப்புள்ளவர்கள். என்பதனை வழிதவறிய ஆட்டு உவமையில் ஆண்டவர் இயேசு எமக்கு முன்வைக்கிறார். நற்செய்தியை (மத்தேயு 18 : 12-14) நாம் ஆழமாக உற்றுநோக்குவோமாயின் மேய்ப்பன் இயேசுவிடம் இருக்கும் ஆடுகள், அவரை நம்பி அவரை மீட்பராக ஏற்றுக்கொண்ட மக்களைக் குறிக்கிறது. இயேசுவை விட்டுப் பாவத்தின் வழியில் நடப்பவர் விலகிப்போன ஆடு எனவும் நாம் அபிப்பிராயப்பட்டாலும், விலகிச் சென்றது ஒற்றை ஆடுதானே என நினைக்காமல், மற்ற ஆடுகள் போதும் என அமைதிகாக்காமல், அந்த ஒற்றை ஆட்டைத் தேடிச்செல்கிற மேய்ப்பன் இயேசுவின் அன்பு வெளிப்படுத்தப்படுகிறது. எந்தவொரு ஆடும் தாமாகவே வழிதவறுவதில்லை. மாறாக, அருகில் ஏதேனும் புல்லைப் பார்த்தால் அந்தப் பக்கம் தாவும், அங்கிருந்து இன்னொரு அழகிய புல்கூட்டத்தைப் பார்த்தால் அங்கே போகும். இவ்வாறே உலக செல்வத்தையும், சிற்றின்பங்களையும் நாடுவோரும் வழி விலகி இறை அன்பின் வெகு தூரத்தில் செல்கின்றனர். ஆட்டைக் கண்டுபிடித்து அள்ளி எடுத்து தோளில் போடும் மேய்ப்பனின் மகிழ்ச்சி எல்லாம் வல்ல இறைவனின் வழி தவறி அலையும் எமக்கு இறையன்பின் ஆழத்தைப் புரிய வைக்கிறது. வழி தவறிய ஆட்டைப்போல எல்லாம் வல்ல இறைவனை விட்டு எமது இதயத்தால் எவ்வளவு தூரம் விலகி இருக்கிறோம் என்பதை நாமறிவோம். பாவ வழியினால் இயேசுவின் இதயத்தை விட்டு விலகும் மக்களை இறைவன் தேடிவருகிறார் என்பதை மட்டுமல்ல, மாறாகத் தன்னோடுள்ள ஆடுகளையும் மேய்ப்பன் உதாசீனம் செய்யவில்லை, அவர்களை மந்தையாய் ஒரு இடத்தில் நிற்க வைத்துவிட்டு வழி தவறிய ஆட்டைத் தேடிச்செல்கிறார் என்பதனையும் அழியா வார்த்தைகளது நற்செய்தி தெளிவுபடுத்துகிறது.